இல்லை. பஞ்சாயத்துக்காலம் முடிந்த பிறகு, மறுபடியும் தேர்தல்
9.00 a.m. வருவதற்கு முன்பு, **delimitation** எல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையை அரசாங்கம் அனுசரித்துவருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பஞ்சாயத்துக்களுடைய பொதுத் தேர்தல் வருகிறவரை எந்தப் பஞ்சாயத்தும் பிரிக்கப்பட மாட்டாதா? அமைச்சர் அவர்கள் கூறுகின்ற கருத்திலிருந்து இதுதான் அவருடைய முடிவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுதான் பொதுவான கொள்கை.

துப்பறியும் நாய்கள் (போலீஸ் இலாகா)

*477 **கேள்வி.—திரு. ராம. அரங்கண்ணல் (திரு. முனு ஆதி** சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போது போலீஸ் இலாகாவில் எத்தனை துப்பறியும் நாய்கள் வளர்க்கப்படுகின்றன?

(இ) அவைகளில் பராமரிப்பிற்காக அரசாங்கத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு?

(உ) 1960-62-ல் இந்த போலீஸ் நாய்களின் துப்பு துலங்கப் பெற்ற கேசுகள் எத்தனை?

(எ) இவைகளால் துப்பறிய இயலாமற் போய்விட்ட கேசுகள் எத்தனை?

(ஐ) துப்பறிய இயலாமற்போனமைக்குக் காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nine dogs.

(*b*) The total expenditure incurred for their maintenance is as follows :—

Year.	Amount spent. Rs.	NP.
1960	**27,019**	**50**
1961	**36,497**	**04**
1962	**18,065**	**36**

(c) and (d)—

Year. (1)	Number of cases detected. (2)	Number of cases not detected. (3)
1960	**40**	**73**
1961	**54**	**99**
1962	**41**	**29**

(*e*) Reasons for non-detection :

(i) Delay in requisitioning dogs,

20th July 1962]

(ii) Disturbance of the scene of the crime by interested parties;

(iii) Scent of the culprit getting mixed up with that of the others like inmates or visitors who inadvertently handle things at the scene; and

(iv) Lapse of time or excessive heat or rain, which causes dissipation of the scent of the culprit.

திரு. சா. கணேசன்: ஒன்பது நாய்களுக்கு இவ்வளவு ஆயிரம் செலவழித்திருப்பதாகச் சொல்வது, நாய்களுடைய பராமரிப்புக்காக இருக்கின்றவர்களுடைய சம்பளம் முதலியவற்றையும் சேர்த்தா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எல்லாம் சேர்த்துத்தான் ஒரு நாளைக்கு ஒரு நாய்க்கு ரூ. 3.86 நயை செலவாகிறது. வைத்தியச் செலவு வேறு இருக்கிறது.

திரு. க. ர. முனிரத்தினம்: இதைப் போன்ற நாய்களை மாவட்ட வாரியாகவோ, அல்லது இரண்டு, மூன்று மாவட்டங்களுக்குப் பொதுவான இடத்தில் வைத்துப் பராமரிக்கவோ உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மதுரையிலும், கோவையிலும் இம்மாதிரி 'ஸ்குவாட்' வைக்க உத்தேசம். அதையொட்டி இப்போதே மதுரையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவம்: இப்போது துப்பறிவதற்காக வைத்திருக்கும் நாய்கள் அல்சேஷியன் வகையைச் சார்ந்தவை. அதே போன்று ராஜபாளையம், சிப்பிப்பாறை போன்ற நாட்டு நாய்களையும் இந்தத் துறையில் ஈடுபடுத்துவதுபற்றி பரிசிலனை செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப் பற்றி இன்னும் பரிசீலனை செய்யவில்லை. கானடா, அமெரிக்கா, யுனைடெட் கிங்டம், நெதர்லாண்ட், சௌத் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இந்த அல்சேஷியன் நாய்களை போலீஸிலும், ராணுவத்திலும் பயன்படுத்திவருகின்ற அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு நாமும் அந்த நாய்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். அங்கத்தினர் சொல்வதை பிறகு பரீட்சார்த்தமாக எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ர. ஜீவரத்தினம்: இப்போது இந்த நாய்கள், கொலைக் குற்றம், திருட்டு போன்றவற்றைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்களையும் கண்டு பிடிக்க இந்த நாய்கள் பயன்படுத்தப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தக் குற்றத்தைக் கண்டு பிடிக்கவும் நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன.

[20th July 1962

திரு. சா. கணேசன் : ராஜபாளையம் நாய் இதற்கு முற்றிலும் தகுதியற்றது என்பதோடுகூட, ராஜபாளையம் ஜாதியே இப்போது அநேகமாக போய்விட்டது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் அளிக்கும் தகவலுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

Anti-corruption branch of Police Department

* 478 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to separate the anti-corruption branch in the Police Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI M. WILLIAM : Sir, in view of the fact that the Anti-Corruption Branch in the Police Department is still investigating the cases of corruption arising in their Department, is it not desirable to separate it from the Police Department and bring it under the control and jurisdiction of the Chief Secretary or any other Secretary to Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not find any difficulty abort this and if the hon. Member Sri M. William can point out any specific instance, I shall look into it.

Law Commission (Recommendations)

* 480 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the present stage of implementing the recommendations of the Law Reform's commissions; and

(*b*) the steps taken to introduce Tamil as court language?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The hon. Member presumably refers to the Law Commission's recommendations on the Reform of Judicial Administration. The remarks of the High Court and the other Heads of Departments on these recommendations are still being received in batches and examined by the Departments of Secretariat. It is not possible to gauge the present stage of the implementation of the various recommendations of the Commission.

(*b*) As the first preparatory step for the introduction of Tamil in Courts, the Government have ordered the preparation of a Glossary giving the Tamil equivalents for all Legal terms. The preparation of this Glossary is in progress. Tamil can be made the Court language only after the Glossary has been completed and the several Acts and Codes have been translated into Tamil and lawyers and the Presiding Officers in Courts are in a position to express themselves in Tamil with the necessary precision and clarity.